# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,936/2 — 1970 දෙසැම්බර් 14 වැනි සඳුදා — 1970.12.14

14,936/2 ம இலக்கம்—1970 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV — உள்ளூராட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### நகர சபைகள் கட்டளைச் சட்டம்

**184 ம் பிரிவின் கீழான கட்டளை**

(255 ம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184 ம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பீலிக்ஸ் றெஜினோல் டயஸ் பண்டாரநாயக்கா ஆகிய நான்—

(அ) சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தினால் சுமத்தப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதில் வேண்டுமென்றே அசட்டையும் தகாத நடத்தையும் ;

(ஆ) தகுதியின்மையும் தவறான முகாமையும், அத்துடன் ;

(இ) சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தினால் வழங்கப்பட்ட தத்துவங்களின் துர்ப்பிரயோகமும்.

மாத்தறை நகர சபையினிடத்து இருக்கிறதென்பதற்கு போதிய ஆதாரம் உண்டு எனத் திருப்திப்பட்டுள்ளேன். ஆதலால் இக்கட்டளை வாயிலாக—

(அ) மாத்தறை நகர சபையைக் கலைக்கிறேன் ; அத்துடன் ;

(ஆ) சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் அந் நகரத்திற்கு ஒரு புதிய நகர சபை அமைக்கப்படும் வரையில் அந்நோக்கத்திற்கெனச் சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் ஒரு நகர சபையின் தத்துவங்களை பிரயோகிப்பதற்கும் அதற்குரிய கடமைகளைச் செய்வதற்குமாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. விதானவசம் கீர்த்திச்சந்திரா நாணயக்காரா அவர்களை மாத்தறை நகரத்தின் கருமங்களை நிர்வகிப்பதற்காக விசேட ஆணையாளராக நியமிக்கிறேன்.

ෆී. ආර්. ඩී. බණ්ඩාරනායක,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு திசம்பர் மீ 14 ந் உ.

12–776.

---

### நகர சபைகள் கட்டளைச் சட்டம்

**184 ம் பிரிவின் கீழான கட்டளை**

(255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பீலிக்ஸ் றெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான் பேருவலை நகர சபைத் தலைவர் திரு. அப்துல் பக்கீர் மரக்கார்ரிடம்—

(அ) சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தினால் விதிக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதில் வேண்டுமென்று அசட்டையும் தகாத நடத்தையும் ;

(ஆ) தகுதியின்மையும் தகாத முகாமையும் ;

(இ) சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தினால் வழங்கப்பட்ட தத்துவங்களின் துர்ப்பிரயோகமும்

இருந்ததற்குப் போதுமான சான்று இருக்கிறதென்று திருப்தியடைகின்றமையினால் இக்கட்டளை வாயிலாக திரு. அப்துல் பக்கீர் மரக்கார் சொல்லப்பட்ட நகர சபையின் தலைவர் பதவியிலிருந்து அகற்றுகிறேன்.

ෆී. ආර්. ඩී. බණ්ඩාරනායක,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு, 1970 ம் ஆண்டு திசம்பர் மீ 14 ந் உ.

12–776/2.


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.